**கவனிக்க.**-2006.11.10 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV(ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1472 - 2006 නොවැම්බර් 17 වැනි සිකුරාදා - 2006.11.17

*1472 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1087 |

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, நவெம்பர் 24 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, நவெம்பர் 10 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத்தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கைச் சுங்கத் திணைக்களம்

### உதவிச் சுங்க அத்தியட்சகர் - வகுப்பு II பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் சுங்க உதவிக் அத்தியட்சகர் வகுப்பு II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கென திறந்த போட்டிப் பரீட்சையொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2007 மாச்சு மாதமளவில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதியானது பத்திரிகைகள் மூலம் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச்செய்வதற்கான உரிமையை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இருபாலாரிடமிருந்தும் இப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகைமைகள் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியாலும் பின்வரும் தகுதிகளுக்கான திருப்திகரமான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரஜை;

(ஆ) மிகச் சிறந்த ஒழுக்கமுடையவர்;

(இ) விண்ணப்பமுடிவுத்திகதியன்று 22 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் ;

(ஈ) அரச சேவையில் பதவியில் நிரந்தரமானவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.

(ii) *உடற் தகைமைகள்.-* ஆண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 5 அங்குலங்களுக்கு குறையாமலும் மார்புச்சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) 33 அங்குலங்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

பெண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 3 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(iii) *கல்வித் தகைமைகள்.-* விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித்தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும்:-

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்; அத்துடன்

(ஆ) இலங்கை கல்விப் பொதுத்தராதர (சா.த.) பரீட்சையில் அல்லது தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியினை அல்லது உயர்தரப் பரீட்சையில் அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பட்டப் பரீட்சையொன்றின் பெறுபேற்றிற்காகக் காத்திருக்கும் எந்தவொருவரும் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவராக மாட்டார். எனினும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப்பரீட்சையில் சித்தியடைந்த ஆளொருவர் அப்பட்டப் பரீட்சையில் சித்திபெற்றுள்ளார் என்ற விடயம் அடங்கிய உத்தியோகபூர்வ கடிதமொன்றை பல்கலைக்கழக பதிவாளரிடமிருந்து பெற்று அதை சமர்ப்பிக்குமிடத்து அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படலாம்.

3. **சேவை நிபந்தனைகள்.-** (i) வேதனம்.- இப்பதவிக்கான திரட்டிய வருடாந்த வேதன அளவுத்திட்டம் வருமாறு ரூபா 1,89,420 - 3,480 x 10 x 3,480 8 - ரூபா 2,52,060 (பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 6/2006, எம். என். 5)

(ii) இப்பதவி நிரந்தரமானதும், நியமனத்தர்கள், தங்களுடைய மாதாந்த வேதனத்திலிருந்து 8% மும் அதே வேளை அரசாங்கம் 12% தொகையையும் கொண்ட பங்களிப்பு ஒய்வூதிய திட்டத்தின் கீழ் பங்களிப்பு ஒய்வூதியத்திற்கு உரித்துண்டு.

2003.01.01 ஆந் திகதிக்கு முன்பதாக ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றை வகிப்பவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால், அவருக்கு தொடர்ந்தும் ஓய்வூதிய பிரமானங்களுக்கமைய ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை உண்டு என்பதுடன் விதவைகள் / அனாதைகள் ஓய்வூதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்,

(iii) சித்திபெறும் விண்ணப்பதாரிகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுக்காலப்பகுதிக்கு தகுதிகூர் நிலையில் வைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படுவர்.

(iv) நியமனத்தர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றக் கூடிய உடல் நிலை தகுதியினை உடையவர்கள் என்பதை பரீட்சிப்பதற்காக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவப் பரீட்சைக்கு உட்படுதல் வேண்டும்.

(v) நியமனத்தர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் இரவிலும் பகலிலும் சேவையாற்றுவதற்கு பணிக்கப்பட்டுள்ளார்கள்.

(vi) அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் பகுதி I இன் (IIஆ) ஆம் பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப்பதவிகளுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு கவனம் கோரப்படுகின்றது.

4. **பரீட்சைத்திட்டம்** - ஆட்சேர்ப்புக்கான பரீட்சைத்திட்டம் வருமாறு :-

| | புள்ளிகள் |
|---|---|
| (1) உளச்சார்புப் பரீட்சை (01 மணித்தியாலம்) | 100 |
| (2) ஆங்கில மொழி (1 1/2 மணித்தியாலங்கள்) | 100 |
| மொத்தம் | 200 |

*உளச்சார்புப் பரீட்சை வினாத்தாள்* - இவ்வினாத்தாளானது மொழித்தேர்ச்சி, கணித அறிவு, தர்க்க ரீதியான அறிவு என்பவற்றை பரிசோதிப்பதற்கான கேள்விகளைக் கொண்டிருக்கும்.

*ஆங்கில மொழி வினாத்தாள்* - விண்ணப்பதாரிகளது வாசிப்பு, எழுத்து, கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் திறன்களை பரிசோதிப்பதற்காக தயாரிக்கப்பட்டதாக இருக்கும்.

**குறிப்பு**.- (i) இப்பரீட்சையானது சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் பந்தி 2 (iii) குறிப்பிடப்பட்ட தகைமை பரீட்சையில் சித்திபெற்ற மொழியிலேயே விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். (அதாவது - சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம்) ஆயினும் தகைமை பரீட்சையை ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரி அல்லது தமிழ் அல்லது ஆங்கிலமொழியில் கல்விகற்ற ஒரு விண்ணப்பதாரி தாம் விரும்பினால் இப்பரீட்சைக்கு சிங்கள மொழியில் தோற்றலாம்.

(ii) ஒழுங்கற்ற எழுத்துக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். தெளிவற்ற எழுத்தில் விடையெழுதும் விண்ணப்பதாரி தகைமைநீக்கம் செய்யப்படக்கூடும்.

(iii) தகைமையுடைய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்படும். ஆனால் பரீட் சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப் படுவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான எல்லாத் தகைமைகளையும் பெற்றுள்ளார் என கருதுதல் ஆகாது.

(iv) மதிப்பிடுகை - ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை கொண்ட விண்ணப்பதாரிகள் தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு இணங்க மொத்தத்தின் இறங்குவரிசையில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் எவ்வித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. பரீட்சைகளில் பெறப்பட்ட மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் மாத்திரம் கவனத்திற்கொள்ளப்படும்.

5. **தெரிவுமுறை அடிப்படை அல்லது தேர்ந்தெடுக்கும் முறை**.- எழுத்துப்பரீட்சையிலும் நேர்முகப்பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு நியமனம் அளிப்பதற்கு தெரிவுசெய்யப் படுவர். நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களில் 10% க்கு மேற்படாத எண்ணிக்கைகள் பெண் விண்ணப்பதாரிகளுக்கு ஒதுக்கிவைக்கப் படும்.

6. விண்ணப்பதாரர் ஆண்/பெண் ஒவ்வொருவரும் பரீட்சைக்குரிய விண்ணப்ப திகதி முடிவுறுவதற்கு முன்னர் சகல தேவைப்பாடு களையும் பூர்த்திசெய்திருக்க வேண்டுமென்பது கட்டாயமானதாகும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (i) இந்த அறிவித்தலின் இறுதி யில் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தாம் பரீட்சை எழுதுவதற்கு உத்தேசித்துள்ள மொழி மூலத்தில் தாமாகவே விண்ணப்பங்களை இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரித்து சொந்த கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினது ஒவ்வொரு கூட்டிலும் அறிவுறுத்தலுக்கிணங்க விண்ணப்ப தாரர்களால் நிரப்பப்பட வேண்டியதுடன் ஏதாவது கூட்டினுள் பொருத்தமற்றவை இருப்பின், அத்தகைய கூட்டினுள் "பொருத்தமற்றவை" என்ற பதம் எழுதப்படல் வேண்டும். கண்டிப்பாக கவனிக்கப்படவேண்டியது யாதெனில், விண்ணப்பத்தில் கூடுகள் நிரப்பப்படாது விடுதலானது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக இருக்கும். (விண்ணப்பங்களானது A4 அளவிலான தாளில் தயாரித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தில் 01 தொடக்கம் 06 வரையான தலைப்பு இலக்கங்கள் முதல் பக்கத்திலும் 07 தொடக்கம் 12 வரையிலானவை இரண்டாவது பக்கத்திலும் மீதியானவை மூன்றாவது பக்கத்திலும் வரும் விதம் தயாரித்தல் வேண்டும்.)

(ii )விண்ணப்பங்களானது 2006 திசெம்பர் 18 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். இத்திகதிக்கு பின் பெறப்படும் எந்தவொரு விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். உறையிடப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தினது இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) பரீட்சைக்கட்டணமாக ரூபா 300 வினை ஏதாவது மாவட்ட/ பிரதேச செயலக அலுவலகத்தில், "பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 4000-20-03-2013" ஆம் இலக்க வருமான தலைப்பின் கீழ் வரவு வைப்பதற்காக செலுத்தப்படலாம். பற்றுச்சீட்டானது விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டியதுடன் விண்ணப் பதாரர்கள் பற்றுச்சீட்டின் படப்பிரதியொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்ள ஆலோசனை வழங்கப்படுகின்றது. இக் கட்டணமானது எச்சந்தர்ப்பத்திலும் மீளச் செலுத்தப்பட மாட்டாது,

(iv) அரசாங்க திணைக்களங்களில் அல்லது சபைகளில் அல்லது கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள், தற்போது தாங்கள் சேவையாற்றும் திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் தலைவர்களினூடாக தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை 2006 திசெம்பர் 18 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினை சென்றடைய வேண்டுமென்ற வேண்டுகோளுடன் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் திணைக்கள அல்லது நிறுவனங்களின் தலைவர்களுக்கு நேரகாலத்துடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் தனிப்பட்டமுறையில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கோ அல்லது திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எவரேனும் உத்தியோகத்தருக்கோ அனுப்பப்படலாகாது. உரியகாலத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள், அவை அத்திணைக் களங்களுக்கூடாக அனுப்பப்பட்டாலும் கூட அவைகள் நிராகரிக்கப் படும்.

அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப் பத்தில் திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவர்களது கையொப்பம், அலுவலக முத்திரை என்பன கொண்டிருக் கப்படாவிடின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(v) *உறுதிப்படுத்துதல்*.- அரசாங்க சேவையிலுள்ள ஒரு விண்ணப்பதாரியின் கையொப்பமானது அவரது திணைக்களத்தலை வரினால் அல்லது அவரது சார்பில் அதிகாரப்படுத்தப்பட்ட அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

ஏனைய விண்ணப்பதாரரின் கையொப்பங்கள் அதிகார மளிக்கப்பட்ட ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர்,

பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க அல்லது பணிப்பாளர் நிர்வகிக்கும் பாடசாலை அதிபர், கடற்படை, வான்படை அல்லது தரைப்படை அதிகாரமுடைய அதிகாரி, ரூபா 230,700 அல்லது அதற்கு மேல் வருடாந்த சம்பளமுள்ள நிரந்தர அரசாங்க அலுவலகர், பௌத்த ஆலயமொன்றின் பிரதம குரு அல்லது உயர்மத குரு அல்லது ஏதாவது வழிபாட்டுத்தலமொன்றுக்கு பொறுப்பாகவுள்ள அல்லது முக்கிய பதவி வகிப்பவர்.

8. **பரீட்சைக்கான அனுமதிகள்**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைகளுக்கென தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டைகளை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்விதம் அனுமதி அட்டையை சமர்ப்பிப்பதற்கு தவறும் விண்ணப்பதாரிகள் பரீட்சைகளுக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

விண்ணப்பதாரி அவருக்கென ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். தமக்கென ஒதுக்கப்படாத பரீட்சை மண்டபத்திற்கு செல்லும் விண்ணப்பதாரிக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும், பரீட்சை ஆரம்பமாகும் நாளன்று தமது அனுமதிப்பத்திரங்களை பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும்.

*பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் ஒழுங்கு விதிகளும்*.- இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி II(அ) வில் வேறாக தரப்பட்டுள்ளன. இந்த விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

பரீட்சைக்கு ஆகக்குறைந்தது ஏழு தினங்களுக்கு முன்னதாக வேனும் அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரி, தாமதமின்றி "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பரீட்சைத திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற விலாசத்துடன் தொடர்புகொண்டு பின்வரும் தகவல்களை வழங்கி தமக்கு அனுமதி அட்டை வரவில்லை என்ற விபரத்தை அறிவித்தல் வேண் டும் :-

1. பரீட்சையின் பெயர் ;
2. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
3. முழு அஞ்சல் முகவரி ;
4. விண்ணப்பதாரியால் விண்ணப்பம் பதிவுசெய்யப்பட்ட தபாற்கந்தோர், பதிவு இலக்கம், மற்றும் விண்ணப்பம் அனுப்பிய திகதி.

9. **அடையாள அட்டைகள்**.- பரீட்சார்த்திகள் அவர்களது அடையாளத்தினை நிருபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதாவதொரு ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;

(ஆ) பரீட்சைத் திகதிக்கு மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்கூறப்பட்டவாறான ஆவணமொன்றினைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தத் தன்மை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பெயரில் இரத்துச் செய்யப்படலாம்.

10. **தகைமை ஆவணங்கள்**.- (i) விண்ணப்பத்துடன் பரீட்சைக்கட்டண பற்றுச்சீட்டைத் தவிர்ந்த பிற ஆவணங்கள் எதுவும் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது. ஆனால் விதித்துரைக்கப் பட்டுள்ளதன் பிரகாரம் தேவையான விபரங்கள் விண்ணப்பத்தில் தரப்பட்டிருத்தல் வேண்டும். இந்த முறையில் சகல அம்சங்களிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பமானது அதன் தகுதிகளின் பெயரில் தீர்மானிக்கப்பட்டு நிராகரிக்கப்படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் தமது தகைமைகளையும் ஆள் அடையாளத் தையும் நிரூபிப்பதற்கான ஆவணச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) பின்வரும் ஆவணங்களின் மூப்பிரதிகள் தேவைப்படும்.

(அ) பொறுப்புள்ள ஆளொருவரினால் கையொப்பமிடபபட்ட குணநலச் சான்றிதழ்.

**குறிப்பு**.- இத்தகைய குணநலச்சான்றிதழானது சமாதான நீதவான், வழக்கறிஞர், வதிவிட பிரதேச செயலாளர் அல்லது ஆண்டொன்றுக்கு ரூபா 2,30,700 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைத் திரட்டிய சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாக நன்கு தெரிந்த உடனடியாக ஆலோசனை பெற்றுக்கொள்ளக்கூடியதுமான ஒருவர். இத்தகைய உறுதிப்படுத்தும் ஆளின் பெயர், பதவி, முகவரி என்பன சான்றுகள் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் விடயத்தில் அவர்கள் குணநல சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரியின் பிறப்புப் பதிவுச் சான்றிதழ் அல்லது பதிவாளர்நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது பற்றிய விசேட சான்றிதழ் (பிறப்பு பதிவுசெய்யப்படாதவர்களின் விடயத்தில்)

**குறிப்பு** - (i) பாடசாலை அல்லது கல்வித் தேவைகளுக்கென வழங்கப்பட்ட விஷேட சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து எடுக்கப்பட்ட சான்றுபடுத்தப்பட்ட பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ii) பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக நம்பிக்கை உறுதிப்பத்திரங்களோ அல்லது ஞானஸ்நான சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பதாரி சாதாரணமாக பயன்படுத்தும் பெயர் அல்லது பெயர்களிலிருந்து பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர் அல்லது பெயர்கள் வேறுபடின் அல்லது பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றும் பெயர் வேறுபடின் பிறப்புகள் இறப்புகள் பதிவுச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27 ஆம் 28 ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு அமைய பிறப்புப் பதிவுள்ள பெயரைத் திருத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

(iv) இலங்கைப் பிரஜை என்ற பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவளிப் பிரசாவுரிமைக்கான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட மூல உத்தியோகபூர்வ கடிதம் (ஏற்புடையதாயின்)

(v) கல்வித்தகைமை மூலச்சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றிதழ்கள் வழங்கப்படாதவிடத்து ஏனைய உத்தியோகபூர்வ ஆவணங்கள். அதாவது பல்கலைக்கழக பதிவாளர் ஒருவரினால் விண்ணப்ப தாரி பட்டப் பரீட்சையில் சித்திபெற்றுள்ளார் என்ற உத்தியோகபூர்வ கடிதம், பரீட்சைகள் திணைக் களத்தினால் விண்ணப்பதாரிக்கு வழங்கப்பட்ட கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சையின் பெறுபேற்றுப்பத்திரம். பரீட்சைத் திணைக்களத்தினால் விண்ணப்பதாரிக்கு, இலங்கைக் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்)பரீட்சையில்/ தேசிய பொதுக் கல்வி தராதரப்பத்திரப் பரீட்சையில் விண்ணப்பதாரி ஆங்கில மொழியில் திறமைச்சித்தி பெற்றுள்ளார் என்பதனைக் குறிப்பிட்டு வழங்கப்பட்ட அப்பரீட்சையின் பெறுபேற்றுத்தாள்.

(vi) விண்ணப்பிக்கும் சமயத்தில் சகல தேவையான ஆவணங்களையும் தயாராக வைத்திருக்கும்படி விண்ணப்பதாரிகள் கேட்கப்படுகின்றனர். தேவை யான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு இயலாத எவரேனும் விண்ணப்பதாரி அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் தாமதாக அவற்றைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கான நியமனத்திற்குத் தகுதியற்றவர்களாவர்.

11. **தவறான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான தண்டனை.-** இப்பரீட்சைக்கான ஒழுங்குவிதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமை அற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

பரீட்சைக்கு விண்ணப்பதாரி ஒருவரினால் தரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏதேனும் அவரது அறிவுக்கு எட்டியவரையில் தவறானவை என அல்லது வேண்டுமென்றே விபரங்களைத் தரவில்லையென காணப்படின் அல்லது அவரது சேவைக்காலத்தின் எக்காலப்பகுதியிலேனும் அவரது பரீட்சைக்குத் தோற்றும் தகைமையற்றவர் என நிரூபிக்கப்படின் அவர் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவார். இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணக்கமாக இல்லாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. இந்த ஒழுங்குவிதிகளில் கவனிக்கப்படாத ஏதேனும் விடயம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தற்றுணிவின்படி கையாளப் படும்.

விண்ணப்பமானது பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் :-

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
பரீட்சைகள் திணைக்களம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
பெலவத்தை,
பத்ரமுல்லை.

செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு,
இல. 46, வொக்ஷல் வீதி,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுங்கத் திணைக்களம்**

*உதவி சுங்க அத்தியட்சகர் வகுப்பு II பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை*

| |
|---|
| |

(அலுவலக பாவனைக்கு மாத்திரம்)

நீர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கான மொழிமூலம் :-

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

1. விண்ணப்பதாரியின் பெயர் :-----.
1.1 முடிவில் முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
(உதாரணம்) SILVA B.A.
1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழ்/ஆங்கிலம்) :-----.
1.3 முதலெழுத்துக்களால் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):-----.
சிங்களம்/தமிழில் :-----.

2. நிரந்தர வதிவிட விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :-----.
அனுமதி அட்டை அனுப்புவதற்கான விலாசம் :-----.

3. தேசிய அடையாள அட்டையினது விபரங்கள் :-
3.1 தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.1 வழங்கப்பட்ட திகதி :-

4. பால் :-
ஆண் - 0 பெண் - 1

(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

5. நீங்கள் இலங்கைப் பிரஜையா இல்லையா என்பதைக் குறிப்பிடவும் :-
வம்வசாவழி மூலம் - 1 பதிவு மூலம் - 2
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

12

6. இனம் :-.
சிங்களம் - 1
இலங்கைத் தமிழ் - 2
இந்தியத் தமிழ் - 3
முஸ்லிம் - 4
பறங்கியர் - 5
ஏனையோர் - 6
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

7. (அ) பிறந்த திகதி :-

| ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ஆ) விண்ணப்பம் முடிவுத் திகதியன்று வயது :-.

| வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

8. உடற்தகைமை தேவைப்பாடுகள் :-
(i) உயரம் : ----- அடி ----- அங்குலங்கள்
(ii) மார்புச்சுற்றளவு :----- அங்குலங்கள்
(விரிவடைந்த நிலையில்)
(ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

9. ஆங்கில மொழியில் திறமைச் சித்தியினைப் பெற்றுள்ளீரா ?

ஆம்/இல்லை

10. பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்)

| | |
|---|---|
| மாவட்ட/பிரதேச செயலாளர் அலுவலகம் :-----. | திகதி :--- |
| பற்றுச்சீட்டு இலக்கம் :-----. | |

(இந்த விபரங்கள் கட்டாயமாகக் கொடுக்கப்படல் வேண்டும்)

11. நீர் ஏதாவது குற்றச் செயலுக்காக எப்பொழுதாவது நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா?
(ஆம்/இல்லை
ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடவும் :-----.

12. கல்வித் தகைமைகள் :-

| பல்கலைக் கழகத்தின் பெயர் | பட்டம் | பட்டத்தினது தன்மை | வருடம் | பாடம் |
|---|---|---|---|---|
| | | | | |

13. இலங்கை கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையிலா அல்லது தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையிலா ஆங்கில மொழியில் திறமைச் சித்தியினைப் பெற்றுள்ளீர் ? :---.

பரீட்சையின் வருடம் :-----.
சுட்டிலக்கம் :-----.

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை:**

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். இவற்றில் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் அல்லது தெரிவின் பின்னரோ பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் கடப்பாடுடையவனாவேன்.

........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

15. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
(பொருத்தமற்றதை வெட்டிவிடவும்)

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி
........................................................................................................
என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும், இத்திணைக்களத்தில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றுபவராக இருக்கின்றார் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் 2006, ............................ ஆந் திகதி இடப்பட்டது என்பதையும், நியமனத்துக்காக அவர் தெரிவுசெய்யப்படின் இத்திணைக்களத்திலிருந்து/ சபை/ கூட்டுத்தாபனத்திலிருந்து அவரை விடுவிக்கமுடியும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

........................................................
உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரது முழுப் பெயர் :-----.
பதவி :-----.
விலாசம் :-----.
திகதி :-----.

**குறிப்பு**.- இவ் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் 7 (V) பந்தியில் குறிப்பிட்ட ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

11-366

## அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான கணனித் திறமையை சோதிக்கும் எழுத்துப் பரீட்சையும் வினைத்திறன் காண் தடைப்பரீட்சையும் 2006 (1)

அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவான ஒரு வினைத்திறன் காண் தடை மற்றும் கணனித் திறனை அளவிடும் எழுத்துப் பரீட்சை 2007 பெப்புருவரி மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. இப்பரீட்சை உரியதாகும் விண்ணப்பதாரர்களைப் பற்றி 1372/23 ஆம் இலக்க 2004.12.24 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணத்தின் 5 மற்றும் 9 ஆம் பிரிவுகளில் விபரிக்கப்பட்டுள்ளது. 2004.01.01 ஆந் திகதிக்கு முன் இணைந்த சேவையின் பதவியொன்றுக்கு நியமனம் பெற்ற அலுவலர் ஒருவர் அரச சேவைக்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்த பின் குறித்த சேவையினது சேவை பிரமாணத்தின் படி சேவையை நிரந்தரப்படுத்த வேண்டும். 2004.01.01 ஆந் திகதிக்கு பின்னரான நியமனமொன்றில் பதவி ஏற்றுக் கொண்ட அலுவலர் ஒருவருக்கு அரச முகாமை உதவியாளர் சேவையின் ஏற்பாடுகள் முழுமையாகவே ஏற்புடையதாகும்.

3. அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III ஐ சேர்ந்த அலுவலர்களுக்கான இப் பரீட்சையானது, கொழும்பு, காலி, கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மாத்தறை, குருநாகல், இரத்தினபுரி, பதுளை மற்றும் அநுராதபுரம் ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் கீழ்க்காட்டப்பட்டுள்ளன :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| காலி | 02 |
| கண்டி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| மாத்தறை | 06 |
| குருநாகல் | 07 |
| இரத்தினபுரி | 08 |
| பதுளை | 09 |
| அநுராதபுரம் | 10 |

மேற்படி நிலையங்களுக்காக போதிய அளவு பரீட்சார்த்திகள் இல்லாவிட்டால் அந்நிலையம் இரத்துச் செய்யப்படும்.

4. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குகள் விதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்ஒழுங்கு விதிகளை மீறினால் அவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாவர்.

5. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம் மாதிரி விண்ணப்பத்திற்கு ஏற்ப தமது விண்ணப்பங்களை தயாரித்துக் கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2006.12.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சை கிளை, பெலவத்தை, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(I) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(II). கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்டுள்ள ஓர் ஆவணத்தை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபினபடி இரத்துச் செய்யலாம்.

7. **விண்ணப்பப் பத்திரங்கள்** .- விண்ணப்பப்பத்திரங்களை "ஏ4" அளவிலான ஒரு தாளில் தயாரித்துக் கொள்ள வேண்டியதுடன் 01-08 இலக்கம் வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்தில் அமைதல் வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சின் மூலம் தயாரித்துக் கொள்ளலாம். எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்ய வேண்டும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்த தடவைகளின் போது அலுவலர்கள் ஒரே முறையில் முழுப் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா 90 பெறுமதியான முத்திரைகளையும் ஒர பாடத்திற்காக தோற்றுவதாயின் ரூபா 50 பெறுமதியான முத்திரைகளையும் விண்ணப்பத்தில் ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றை உரியவாறு பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம மீளச் செலுத்தப்படமாட்டாது. இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

8. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசி அட்டையின் ஒரு பிரதியுடன் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை

பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. எவரேனும் அலுவலர் ஒருவருக்கு பரீட்சை திகதிக்கு குறைந்த பட்சம் 07 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடையாவிடின், அனுமதி அட்டை கிடையாமை பற்றி பின்வரும் விபரங்களுடன் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சை கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தந்தி முகவரி : "பரீட்சை"பத்தரமுல்ல).

(I) பரீட்சையின் பெயர் ;
(II) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(III) முழு முகவரி ;
(IV) விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம் மற்றும் திகதி.

9. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றகூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் செலுத்தப்பட மாட்டாது.

10. தொடர்புடைய சேவையில் சேர்வதற்கான பரீட்சைக்குத் தோற்றிய மொழியிலோ அல்லது அரச கரும மொழியொன்றிலோ அலுவலர்கள் இப்பரீட்சைக்கு தோற்றலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குச் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் இப்பரீட்சைக்கு தோற்றலாம்.

11. அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கு உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

12. பரீட்சை பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுவதுடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும்.

13. **பரீட்சை திட்டம்.**-பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் உள்ளடக்கிய ஓர் எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

| பாடம் | புள்ளிகள் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| (1) அலுவலக முறைகள் | 100 | 1 மணித்தியாலம் | 01 |
| (2) கணக்கீட்டு முறைமைகள் | 100 | 1 மணித்தியாலம் | 02 |
| (3) கணனிப் பரீட்சை | 100 | 1 1/2 மணித்தியாலம் | 03 |

13.1. *அலுவலக முறைமைகள்.*-அரச அலுவலகங்களில் கையாளப்படுகின்ற அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படை அறிவும், அவ் அறிவினை செய்முறையாக பயன்படுத்தும் திறனும், கடமையுடன் தொடர்புடைய ஆவணங்களை நன்கு புரிந்துகொண்டு தெளிவாக சுருங்கிய குறிப்புகளின் மூலம் தமது கருத்துக்களை/ஆய்வுகளை சமர்ப்பிக்கும் ஆற்றலும் விதிக்கப்பட்ட கட்டளையின் கீழ் கடிதமொன்றை வரைவுபடுத்தும் திறனும் சோதிக்கப்படும்.

13.2 *கணக்கீட்டு முறைமைகள்.*- அரச அலுவலகங்களில் கையாளப்பட்டு வருகின்ற ஆரம்ப கணக்குகள் மற்றும் கணக்கு கட்டுப்பாட்டுப் புத்தகங்களின் செயற்பாடு பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் அளவிட இதனால் எதிர்பார்க்கப்படுகிறது.

13.3 கணனிப் பரீட்சைப் பரீட்சார்த்தி பின்வரும் ஆற்றல்களைக் கொண்டுள்ளாரா என சோதிப்பது இப்பரீட்சையின் நோக்கமாகும் ;-

தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படைக் கருதுகோள்கள் வின்டோஸ் இயக்கமுறைமை
கோப்பு முகாமை

| | |
|---|---|
| **சொல் முறை வழிப்படுத்தல்** | அடிப்படைத் திறமைகள், திரைக்கு பழக்கப்படல், பாடப் பதிப்பு, பாடங்களை நேர்ப்படுத்தல், எழுத்துரு வகையும் பண்புகளும், பந்தி உள்தள்ளல், வரி வெளிகள் மாற்றுதல்<br>தத்தல் அமைப்பு, பாடத்தை கண்டுபிடித்தலும் மாற்றிடுதலும் இலக்கணம் தேசோரஸ்<br>நிரல்கள், பக்க அமைவு செயற்பாடுகள்<br>ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகளை தயாரித்தல், பாடத்தை வரிசைப்படுத்தல்<br>கோப்பு முகாமை<br>அஞ்சல் இணைப்பு<br>'மக்ரோ' தொழிற்பாடு |

*தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படைக் கருதுகோள்கள் வின்டோஸ் இயக்கமுறைமை*
*கோப்பு முகாமை*

| | |
|---|---|
| **விரிதாள்** | அடிப்படைத் திறமைகள்<br>வடிவமைத்தல்<br>பதிப்பித்தல்<br>நிரவ்களும் வீச்சும், செருகுதல், நீக்குதல் தகவல்களைத வரிசைப்படுத்தல்<br>வரைபடங்களை படைத்தல்<br>அச்சிடல்<br>@பயன்பாடு<br>மக்றோக்களுடன் பணியாற்றல், கோப்பு முகாமை |
| **தரவுத்தளங்கள்** | அறிமுக அடிப்படைத் திறமை<br>தரவுத்தளங்கள் உருவாக்கலும், பிரயோகமும்<br>படிவங்கள்<br>இணைப்புப் படிவங்கள், மேல்வரும் படிவங்கள், உரையாடல் தகவல் பெட்டிகள்<br>வினாக்கள்<br>வரிசைப்படுத்தல்<br>அறிக்கைகள்<br>மக்றோக்களுடன் பணி செய்தல் |
| **நிகழ்த்துக்காட்சி/வரைகலை** | அடிப்படைத் திறமைகள், பதிப்பித்தல், வடிவமைத்தல்<br>வடிவமைப்பு பிரயோகித்தல், படிவங்களை செருகுதல், ஆயத்தப்படங்களும், வரைபடங்களும்<br>படவில்லை காட்சிகளும், விளைவு அசைவூட்டலும்<br>நிகழ்த்துக் காட்சி கருவிகளைப் பயன்படுத்தல், முதன்மைகளைத் தயாரித்தல், படவில்லைகள் குறிப்புகள் அச்சிடல். |
| **இணையம்** | இணையத்தை அறிமுகப்படுத்தல், உலகளாவிய வலையமைப்பு, எவ்வாறு வழிகண்டறிதல் இணைய செயல்முறை |
| **மின்னஞ்சல்** | அறிமுகம், அடிப்படைத்திறமைகள். அஞ்சல்களைப் பெறுதல் அனுப்புதல், பதிலளித்தல்<br>இணைப்புகளுடன் செயலாற்றல், புனைப் பெயர்களை உருவாக்கி பயன்படுத்தல் தகவல்களை இயற்றுதல். |

*__குறிப்பு__.-அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணத்தின் பந்தி 5 : 1: 2 இன்படி தேசிய பயிலுநர் தொழில்நுட்பப் பயிற்சி அதிகாரசபையினால் அளிக்கப்படுகின்ற கணனி நடவடிக்கை உத்தரவுச்சீட்டு அல்லது கணனி நடவடிக்கை உத்தரவுச் சீட்டுக்கு சமமான அல்லது அதை பார்க்க உயர்மட்ட பெறுமதியுடைய மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, இதன் I ஆம் அட்டவணையில் காட்டப்படுகின்ற நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்ட கணனி சான்றிதழ்களைப் பெற்றுள்ள அலுவலர்கள் இக்கணனி பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படுவர்.*

*14. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.*

ஏ. நோபேட்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொத நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2006, நவெம்பர் 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு IIIஇன் அலுவலர்களுக்கான கணனித் திறமையைச் சோதிக்கும் எழுத்துப் பரீட்சையும் வினைத்திறன் காண் தடைப்பரீட்சையும் - 2006 (1)**

Efficiency Bar Examination and the Written Test on Computer Skills for Officers in Class III of Public Management Assistants' Service – 2006 (1)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) உதா: Mr. SILVA, M.A.
1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(சிங்களத்தில்/தமிழில்)
1.3 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)
1.4 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

2. சேவை நிலையமும் முகவரியும் :-
2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)
2.2. அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(சிங்களத்தில்/தமிழில்)
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்)

3. தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. பரீட்சைக்குத் தோற்றும் நகரமும் நகர இலக்கமும்
நகரம் :----, நகர இலக்கம் : ☐
(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 3.0 இன்படி நகரத்தை குறிப்பிட்டு நகர இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும். இதனை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

5. பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :-
சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும். இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

6. பால் :- பெண் - 1- ஆண்- 0 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்) ☐

7. தற்போது வகிக்கும் பதவி
7.1 பதவி :----.
7.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

8. நீங்கள் தற்போது தோற்ற உள்ள பாடம் /பாடங்கள் :----
(வர்த்தமானப் பத்திரிகையின் பந்தி 13.0 யை பார்க்கவும்)

| தொடர்பு இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |

9. 9.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? :----.

9.2 பரீட்சைக்கு தோற்றுவது முதல் தடவை அல்லாது இருப்பின் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :----.

9.3 முத்திரைக் கூடு :----.

| |
|---|
| முழுப் பரீட்சைக்காக ரூபா 90 பெறுமதியான முத்திரைகளையும் ஒரு பாடமாயின் ரூபா 50 பெறுமதியான முத்திரையையும் இங்கு ஒட்டி விடவும். |

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் உரிய பெறுமதியுடைய முத்திரைகளை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றை பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். முத்திரைகள் ஒன்றன் மேல் ஒன்று ஒட்டுதலாகாது.

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும் மேலே காட்டப்பட்டுள்ள மொழிமூலமாக பரீட்சைக்கு தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், இத்தால் வெளிப்படுத்துகிறேன். இங்கு ஒட்டப்பட்டுள்ள ரூபா ............. பெறுமதியான முத்திரைகள் பாவிக்கப்படாத செல்லுபடியானவையும் என்றும் உறுதிமொழிகின்றேன். இப்பரீட்சை தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைந்தொழுக நான் உடன்படுகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.-பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தத் திணைக்களத் தலவைர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் அலுவலரும் தனிப்பட்ட முறையில் எனக்கு தெரிந்தவருமான திரு./திருமதி/செல்வி .................... என்பவர்.............. ஆந் திகதி என் முன்னியில் கையொப்பமிட்டார் என்பதை சான்றுப்படுத்துகிறேன்.

...............
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும்,
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

1. மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும் ;
2. இவ்அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் தோற்றினார்/தோற்றவில்லை என்றும் ;
3. அலுவலர் இதற்கு முன்பு பரீட்சைக்கு தோற்றியிருப்பதனால் உரிய பெறுமதியுடைய முத்திரை இவ் விண்ணப்பப் படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் ;
4. அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர் என்றும்,

இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

* தேவையற்றவைகளை கீறிவிடவும்.

.............
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**அட்டவணை I**

*மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்று அங்கீகரிக்கப்படும் நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட கணனி சான்றிதழ்கள் தொடர்பான அட்டவணை*

| *Serial No.* | *Name of Institute* | *Address of Institute* | *Course* |
|---|---|---|---|
| 1. | A.C.T. Studies | No. D768/3, Pandukabhaya Mawatha, Ampara. | Diploma in Information & Communication Technology |
| 2. | Bureau of Information Technology | Sky Line Building, 50-52, Colombo Road, Chilaw | Diploma in Information & Communication Technology |
| 3. | Don Bosco Technical Centre | Ettukala, Negombo | Diploma in Computer Science |
| 4. | Techincal Education Institute | No. 4, Sri Dhamma Mawatha, Colombo 10 | Diploma in Information and Communication Technology |
| 5. | Technology of Computer College of Sri lanka | No. 09, Wilmate Balasooriya Mawatha, Nupe, Matara | Diploma in Computer Science |
| 6. | Special Vocational Training Centre (computer) | Vocational Training Authority of Sri Lanka, Fort, Matara | Diploma in System Design Programming |
| 7. | Le Echole Computer Systems (Pvt) Ltd | No. 225, Negombo Road, Kandana | Diploma in Computer Operation & Applications |
| 8. | Open Arc Computer Science School Ltd | No. 377B, High Level Road, Nugegoda | Diploma in Computer Science |
| 9. | Brightway Institute (Pvt) Ltd | No. 174/1, Kandy Road, Kiribathgoda | Diploma in Computer Operation & Applications |
| 10. | SLIATE Sri Lanka Institute of Advance Technical Education | No. 98, Labuduwa, Akmeemana | Higher National Diploma in Technology |
| 11. | IDM Computer Studies (Pvt) Ltd | No. 5, Visaka Road, Colombo 04 | Diploma in Computer Studies |
| 12. | IDM Computer Studies (Pvt) Ltd | No. 5B, Hakmana Road, Matara | Diploma in Computer Science |
| 13. | Yowun Sewana Centre | National Youth Services Council, Monaragala | Diploma in Information Technology |
| 14. | IDM Computer Studies (Pvt) Ltd | No. 725, Peradeniya Road, Kandy | Diploma in Computer Studies |
| 15. | IDM Computer Studies (Pvt) Ltd | No. 114A, Janappriya Mawatha, Panadura | Diploma in Computer Studies |
| 16. | IDM Computer Studies (Pvt) Ltd | No. 148, Grins Road, Negombo | Diploma in Computer Studies |
| 17. | IDM Computer Studies (Pvt) Ltd | Wakwella Road, Galle | Diploma in Computer Studies |
| 18. | Cholankanda Youth Training Centre | Udahathenna, Gampola | Diploma in Computer Studies |
| 19. | IDM Computer Studies (Pvt) Ltd | No. 136, Main Street, Anuradhapura | Diploma in Computer Studies |
| 20. | IDM Computer Studies (Pvt) Ltd | No. 168/1, Puttalam Road, Kurunegala | Diploma in Computer Studies |

## இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2005

மேற்குறிப்பிட்டுள்ள சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் பரீட்சைகள் 2007 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் பேராதனையில் ஆரம்பிப்பது என்று எதிர்பாக்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் இரண்டுக்கும் ஒரே முறையில் தோற்றக் கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடத்திட்டம்.**- முதலாம், இரண்டாம் வினைத்திறமைகாண் தடைகள் நிர்வகிக்கின்ற பாடவிதானம் பத்திரம் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் சேவை யாப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உத்தியோகத்தர்களினுடைய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை I பாடத்திட்ட இணைப்பு 'அ' விலும் இரண்டாவது வினைத்திறமைகாண் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் 'ஆ' விலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வினைத்திறமைகாண் பரீட்சை விடயங்களின் பொருட்டு பரீட்சைக்கு ஒரு தடவைக்கு மேல் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

4. இச்சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்கள் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய பாடங்கள் பின்வருமாறு :-

### இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை

| 1 ஆவது வினைத்திறமைகாண் பரீட்சை | | | 2 ஆவது வினைத்திறமைகாண் பரீட்சை | | |
|---|---|---|---|---|---|
| பாட இல. | விடயம் | காலம் மணித்தியாலம் | பாட இல. | விடயம் | காலம் (மணித்தியாலயம்) |
| 01 | நிதி முறைகள் | 03 | 01 | 1 ஆம் பகுதி | 03 |
| 02 | நிருவாகம் | 03 | 02 | 2ஆம் பகுதி | 03 |
| 03 | திணைக்கள பிரமாணம் வினாப்பத்திரம் 01 | 02 | 03 | 03ஆம் பகுதி வினாப்பத்திரம் i | 03 |
| 04 | திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் 02 | 03 | 04 | 03ஆம் பகுதி வினாப்பத்திரம் ii | 03 |
| 05 | விசேட பத்திரம்* | 03 | 05 | 03ஆம் பகுதி - வினாப்பத்திரம் iii | 03 |
| | | | 06 | 03ஆம் பகுதி - வினாப்பத்திரம் iv | 03 |
| | | | 07 | 03ஆம் பகுதி - வினாப்பத்திரம் v | 03 |
| | | | 08 | 03ஆம் பகுதி - வினாப்பத்திரம் vi | 03 |
| | | | 09 | 03ஆம் பகுதி - வினாப்பத்திரம் vii | 03 |
| | | | 10 | 03ஆம் பகுதி - வினாப்பத்திரம் viii | 03 |
| | | | 11 | 03ஆம் பகுதி - வினாப்பத்திரம் ix | 03 |
| | | | 12 | 03ஆம் பகுதி - வினாப்பத்திரம் x | 03 |
| | | | 13 | 03ஆம் பகுதி - வினாப்பத்திரம் xi | 03 |

* இதன் பொருட்டு கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**குறிப்பு.**- இரண்டாவது வினைத்திறமைகாண் பரீட்சை விண்ணப்பதாரிகள் அமரவேண்டியது பகுதி 01 அல்லது 2 ஆவது வினாப்பதிரம் இரண்டில் ஒன்றுக்கும் 03 பகுதி II இன் இரு வினாப்பத்திரத்திற்கு மட்டும் ஆகும். ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகளாவது பெறல் வேண்டும்.

5. 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தையுடைய திறைசேரி சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியைக் கவனிக்குமாறு இவ்வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளுக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

திணைக்களப் பரீட்சை (பதவி உயர்வு மற்றும் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை உட்பட) பரீட்சைகளுக்கும் தோற்றும் மொழி, உத்தியோகத்தர் அரச சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியாகும். போட்டிப் பரீட்சையில்லாமல் நேரடியாக சேவையில் சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கான மொழியாக இருக்க வேண்டியது உத்தியோகத்தர் சேவையில் சேர்வதற்கு தகுதி பெற்ற மொழி அல்லது அரசாங்க மொழியாகும்.

06. விண்ணபதாரிகளுக்கு கீழே தரப்பட்டுள்ள வினாப்பத்திரங்களுக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விடையளிப்பதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன:-

(I) நிதி முறைகள்
(II) நிருவாகம்
(III) திணைக்களப் பிரமாணங்கள் I
(IV) திணைக்களப் பிரமாணங்கள் II

7. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியியல் பரீட்சைக்கு தோற்றிய பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

8. விண்ணபத்திரங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய புள்ஸ்காப் தாளின் இருபக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட இரு பரீட்சைகளுக்கும் சமூகமளிப்பதானால் வெவ்வேறாக ஒவ்வொரு பரீட்சையின் பொருட்டும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ்விதிகளும் பிரமாணங்களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

10. விண்ணப்பப்பத்திரங்கள் 2006.12.15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ, "கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் பேராதனை, ஆணையாளர் நாயகத்திற்கு" கிடைக்கக்கூடியதாக திணைக்களம்/ அலுவலக தலைவரினூடாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

11. பரீட்சை தினத்திற்கு குறைந்த பட்சம் ஏழு நாட்களுக்கு முன்னர் வரை பரீட்சார்த்தி ஒருவர் தமது அனுமதி அட்டவணையைப் பெறாதிருந்தால், அவரால் அது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும். (*தந்தி, அனுப்பும் விலாசம்*: "பரீட்சைகள், கொழும்பு") என்ற விலாசத்திலுள்ள பரீட்சை ஆணையாளர் நாயகத்தோடு தாமதமின்றி தொடர்பு கொண்டு தனது அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லையென்பதை பின்வரும் தகவல்களுடன் அறிவிக்க வேண்டும் :-

(1) பரீட்சையின் பெயர்;
(2) முழுப்பெயர்;
(3) முழுமையான தபால் விலாசம் ;
(4) தபால் கந்தோரும், பதிவிலக்கமும் விண்ணப்பம் அனுப்பிய திகதியும்.

அண்மையிலுள்ளவர்கள் பரீட்சை ஆணையாளருடன் 'ஈ' கிளைத் தலைவர் மூலம் தொடர்பு கொள்ளும்படி ஆலோசனை கூறப்படுகின்றது.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளுக்கு இணங்கியொழுகத் தவறும் பரீட்சார்த்திகளால் பின் சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

13. அடையாள அட்டை சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்ட 1971 ஆனி மாதம் 29 ஆந் திகதியிடப்பட்டதும் எஸ். ஈ. 274 ஆம் இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கை பரீட்சார்த்திகள் அனைவரினதும் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை நிரூபிப்பது பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும்.

14. இப்பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது.

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படமாட்டாது ;-

(ஆ) இதன் பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக -
முழுப்பரீட்சை - ரூபா 100.00
ஒரு பாடம் - ரூபா 50.00

கட்டணங்கள் பரீட்சார்த்தியின் கையொப்பம் இடப்பட்டு பெறுமதி நீக்கம் செய்யப்பட்ட அரசிறை முத்திரைகளில் செலுத்தப்படல் வேண்டும்.

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள்.

எஸ். ஜே. பத்திரன,
செயலாளர்,
கால்நடை உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு,
கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு,
இல. 45, புனித மைக்கல் வீதி,
கொழும்பு - 3,

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பரீட்சைத் திணைக்களம் - இலங்கை**

*இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான*
*வினைத்திறன் காண் தடைப்பரீட்சை 2005*

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.

2. பிறந்த திகதி :----.
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

3. (i) பதவிப் பெயர் :----.
(ii) திணைக்களத்தின் பெயர் :----.

4. அஞ்சல் முகவரி (அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக) :-

5. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையிலுள்ள உத்தியோகத்தராயின் அத்தகைய சேவைக்கு அவர் நியமிக்கப்பட்ட திகதி :----.

6. விண்ணப்பிக்கும் பரீட்சை (பொருத்தமற்றதை நீக்கிவிடுக) :-

(அ) முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை/(ஆ) இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை :----.

7. தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்) :-
அறிவித்தலின் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் குறிக்கப்படல் வேண்டும் :-

(1) பாட எண் ---- பாடம் ----
(2) பாட எண் ---- பாடம் ----
(3) பாட எண் ---- பாடம் ----
(4) பாட எண் ---- பாடம் ----

8. உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :----.

9. (i) இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக :----.
(ii) அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :----.

10. செலுத்தப்பட்ட தொகை ரூபா :----.

| முத்திரைக்கூடு |
|---|

மேலே கூறப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும் மேலே 10 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையவரென்றும் நான் உறுதிமொழிகின்றேன்.

இவ்விண்ணப்பத்தில் ஒட்டப்பட்ட முத்திரைகள் பெறுமதியுள்ளவையென்றும் என்னால் பெறுமதி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்னர் பாவிக்கப்படாதவையென்றும் மேலும் உறுதியுரைக்கின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், பேராதனை, ஆணையாளர் நாயகத்திற்கு ஊடாக முன்வைக்கப்படுகிறது.

இதனகத்து காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும் எட்டாம் பந்தியில் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற அவர் தகைமையுடையவெரன்றும் (கட்டணம் செலுத்தப்படவேண்டியிராதவிடத்து நீக்கப்படலாம்) முத்திரைகள் முறையாக ஒட்டப்பட்டு பரீட்சார்த்தியால் பெறுமதி நீக்கம் செய்யப்பட்டது/செய்யப்பட்டன எனவும் பரீட்சார்த்தியின் கையொப்பம் எனவும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

.............
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
பதவிப் பெயரும்.

திகதி :----.

**பின்னிணைப்பு "அ"**

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

(1) நிதி முறை
(2) நிருவாகம்
(3) திணைக்களப் பிரமாணங்கள் 1
(4) திணைக்களப் பிரமாணங்கள் 2

(1) நிதி முறை

நிதி என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :-

(அ) இலங்கை அரசாங்க நிதி ஒழுங்கு விதி - பகுதி 1 (10 ஆம் அத்தியாயம் நீங்கலாக)

(ஆ) நடப்பாண்டு மதிப்பீடுகள் எடுத்துக்காட்டு அவற்றின் ஒழுங்குகள், அரசிறை தலைப்புகள் நிதி ஒதுக்கீட்டுச் சட்டங்கள்.

(இ) கச்சேரிகள் ஊடாக விசேடமாக மேற்கொள்ளப்படும் கணக்குகள், சட்டம்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்தி பெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறல் வேண்டும்.

**(2) நிருவாகம்**

நிருவாகம் என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :-

(அ) அலுவலக மற்றும் வெளிக்கள நடவடிக்கை

(ஆ) தாபனக் கோவை அத்தியாயம் I, II, III, V, VI, VII, IX, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, மற்றும் XLVIII.

குறிப்பு.- பரீட்சார்த்திகள் சித்தி பெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறல் வேண்டும்.

(3) **திணைக்களப் பிரமாணங்கள் 1**
திணைக்களப் பிரமாணம் தொடர்பான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இப்பரீட்சை வினாத்தாள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய இரண்டு மணித்தியால வினாப்பத்திரமாகும்.

ஸ்பரிசத்துடன் தொற்றிப் பரவும் தொற்று நோய்க்கான சட்டம் மற்றும் திணைக்கள கட்டளை கால்நடை வைத்திய சேவைக்கு பொருத்தமான சுற்று நிருபங்கள்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்தி பெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறல் வேண்டும்.

*(4)* ***திணைக்களப் பிரமாணங்கள் II***

இவ்வினாப்பத்திரம் பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய 03 மணித்தியால வினாப்பத்திரமாகும் :-

(1) மாதிரிகளை அனுப்புதல் பிரேத பரிசோதனை உள்ளிட்ட நோய் ஆய்வு உறுதி ஆய்வுகூட பரிசோதனை முறைகள், கர்ப்ப பரிசோதனை உள்ளிட்ட வெளிக்கள நோய் ஆய்வு உறுதி பரிசோதனைகள், விலங்குகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்து, குருதி பாயம் (Sera) ஆகிய முற்காப்பு நடவடிக்கைகள்.

(2) செயற்கைமுறைச் சினைப்படுத்தல் செயல்முறையும், தொழில்நுட்பமும், இனப்பெருக்கத்தின் அடிப்படைத் தத்துவங்களும் கன்று வளர்ப்பும், அடைகாத்தல், குஞ்சு பொறித்தல், கோழிக்குஞ்சு வளர்ப்பு, கால்நடைகளுக்கான போஷணை, உணவுப் பண்டம், பசுந்தீவனப் பயிர்ச்செய்கை, வெவ்வேறுபட்ட பயிர்கள், புற்செய்கை, உலர்புல், சைலேஜ் தயாரிப்பு, கால்நடைப் பராமரிப்பு என்பன.

(3) பால் உற்பத்தி, கிருமியளிக்கப்பட்ட பாலை போத்தல்களில் அடைத்து எடுத்துச் செல்லல், பால் சுகாதாரம் பாதுகாப்பு, பால் ஆடை பகுத்தல் உள்ளடங்கலாக பரிசீலனை செய்தல். பால் ஆடை நீக்கல், பட்டர் நெய் மற்றும் தயிர் உற்பத்தி.

**குறிப்பு.**- பரீட்சார்த்திகள் சித்தி பெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறல் வேண்டும்.

***பின்னிணைப்பு "ஆ"***

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும்.

பகுதி *I* - பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும்.
2.1, 2.2, 4.1, 4.2, 5.2, 5.8, 6.5, 7.2.1, 8.2, 8.2.2, 8.2.3, 8.3.1, 9.2. 9.4, 9.6, 9.7 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

பகுதி *II* - பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும்.
1.1.1, 1.1.4, 1.2.1, 3.2, 3.1.1, 3.1.2, 3.2.1, 10.1.1, 10.1.2, 10.1.3, 10.1.4, 10.1.6, 10.2.1, 10.2.8, 10.4.1 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

பகுதி *III*

வினாத்தாள் : (01) தொற்றுநோயியல்
(02) கால்நடைப் பொருளியல்
(03) மிருக வைத்திய பொதுச் சுகாதாரம்
(04) விவசாய விஸ்தரிப்பு
(05) பரம்பரையியல் சினைப்படுத்தல்
(06) விலங்கு உடற்றொழிலியலும் இனப்பெருக்கமும்
(07) வீடமைப்பு முகாமைத்துவம்
(08) விலங்குப் போசணை
(09) பசும்புல் மற்றும் விலங்கு தீவனப் பயிர்
(10) செயல்பாட்டு நுண்ணுயிர் இனவியலும் நீர்ப்பீடணவியலும்
(11) மருத்துவ பயன்படுத்துகை நோயியல் ஒட்டுண்ணியியல்

இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

**கவனிக்க.**- பரீட்சார்த்திகள் சித்தி பெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறல் வேண்டும்.

11-478

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.